அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற் றிய திதியே ; ஒடுங்கி மலத்து உளதாம் ;
அந்தம் ஆதி என்மனார் புலவர் (1)

அவையே தானேயாய் ; இரு வினையின்
போக்கு வரவு புரிய ; ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே (2)

உளது ; இலது என்றலின் ; எனது உடல் என்றலின் ;
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் ; கண்படில்
உண்டிவினை இன்மையின் ; உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா (3)

அந்தக் கரணம் அவற் றின் ஒன்று அன்று ; அவை
சந்தித்தது ஆன்மாச் சகச மலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே (4)

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா ; ஆங்கு அவை போலத்
தாம் தம் உணர்வின் தமி அருள் ;
காந்தம் கண்ட பசாசத்து அவையே (5)

உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இரு திறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே (6)

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது ; அசத்துஇலது ; அறியாது ;
இருதிறன் அறிவுளது ; இரண்டலா ஆன்மா (7)

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத் ;
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த ; விட்டு ;
அன்னியம் இன்மையின் ; அரன்கழல் செலுமே (8)

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்சு எழுத்தே (9)

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே (10)

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே (11)

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா

அம்மலம் கழீஇ ; அன்பரொடு மரீஇ ;
மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே (12)